## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடம் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த ஆரோக்கியத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக. ஆமீன்

اللّٰهُمَّ أَيِّدْ إِمَامَنَا بِرُوْحِ الْقُدُسِ وَبَارِكْ لَنَا فِيْ عُمُرِهٖ وَأَمْرِهٖ


بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை காதியான்

# பதர்

The Weekly BADAR Qadian

இதழ் 1

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபிக் அஹ்மது

www.akhbarbadarqadian.in

30 ஜமாதியுல் அவ்வல் 1437 ஹிஜ்ரி கமரி 10 மார்ச் 2016


♦ லூதியானாவை சார்ந்த மீர் அப்பாஸ் அலி அவர்கள் அதிகமாக உண்மையான உணர்வுகளுடன் தமது பற்றையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். எனக்காக அவர்கள் எல்லா வகையான துன்பங்களையும் ஏற்றுக் கொண்டார்கள் என்ற இந்த விஷயத்தை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது.

♦ மக்ஃபூர் மற்றும் மர்ஹூம் ஹாஜி சாஹிப் அவர்கள் ஒரு பெரும் ஜமாஅத்தின் தலைவராக இருந்தார்கள். உண்மையில் பைஅத் செய்து தமது உள்ளத்தால் இவ்வியக்கத்தில் அவர்கள் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

♦ காஸி சாஹிப் அவர்கள் இந்த எளியவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்களில் ஒருவராக இருக்கின்றார்கள். மார்க்கத்திற்காக தொண்டு புரிவதற்கு எல்லா நேரமும் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### லூதியானாவை சார்ந்த மீர் அப்பாஸ் அலி

இவர் எனது முதல் நண்பராவார். இவர்களது உள்ளத்தில் இறைவன் எல்லாவற்றிற்கும் முதலாவதாக எனது அன்பை இட்டுள்ளான். எல்லாரையும் விட முதன் முதலில் பயணத்தின் துன்பத்தை சகித்தவாறு நல்லவர்களின் நடைமுறைக்கேற்ப தன்னந்தனியாக அல்லாஹ்வுக்காக மட்டும் காதியானில் என்னை சந்திப்பதற்காக வந்த பெரியவர் இவரேயாவார். அவர்கள் அதிகமாக உண்மையான உணர்வுகளுடன் தமது பற்றையும் நன்றியுணணவர்வையும் வெளிப்படுத்திக் காட்டினார்கள். எனக்காக அவர்கள் எல்லா வகையான துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள் என்ற இந்த விஷயத்தை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது. மேலும் சமுதாயத்தின் நாவிலிருந்து எல்லா வகையான பேச்சுக்களையும் அவர்கள் கேட்டார்கள். மீர் சாஹிப் மிக சிறந்த நிலைமைகளில் உள்ள ஒரு மனிதராகவும் இருக்கின்றார்கள். ஒரு முறை இந்த எளியவனுக்கு அவர்கள் தொடர்பாக அதாவது அதன் வேர் உறுதியாக (நிலைபெற்று) உள்ளது. அதன் கிளை வானத்தை எட்டியுள்ளது என்ற இல்ஹாம் வந்தது. அவர்கள் இந்த பயணிகள் தங்குமிடத்தில் முழுக்க முழுக்க (இறைவன் மீது) நம்பிக்கை வைத்தே தமது வாழ்வை கழிக்கின்றார்கள். தமது ஆரம்ப நாட்களில் அவர்கள் இருபது வருடங்கள் வரை ஆங்கிலேய அலுவலகத்தில் அரசாங்க ஊழியராக இருந்து வந்தார்கள். ஆனால், ஏழ்மையின் காரணமாகவும் ஒன்றுமற்றவர்களாக இருந்ததன் காரணமாகவும் அவர்களது முகத்தை பார்க்கும் போது அவர்கள் ஆங்கிலம் படித்தவராகவும் இருந்தார்கள் என்ற எண்ணம் ஒருபோதும் வராது.

ஆனால், உண்மையில் அவர்கள் பெரும் தகுதியுள்ளவர்களாகவும் நேரான நிலைமைகளில் இருப்பவர்களாகவும் நுட்பமான ஞானமுள்ளவர்களாகவும் இருக்கின்ற அதே வேளையில் அத்துடன் மிகவும் எளிமையுடன் காணப்பட்டார்கள். இதன் காரணமாகவே சந்தேகங்களை ஏற்படுத்துகின்ற சிலரின் சந்தேகங்கள் அவர்களது உள்ளத்தை துக்கத்தில் ஆழ்த்தி விடுகின்றது. ஆனால், அவர்களது ஈமானின் ஆற்றல் விரைவாக அவற்றை அகற்றி விடுகின்றது.

### அல்லாஹ்வுக்காக நான் நேசிக்கின்ற மர்ஹூம் முன்ஷி அஹ்மது

இப்போது மிகவும் துக்கம் நிறைந்த உள்ளத்துடன் வேதனை நிறைந்த ஒரு சம்பவத்தை எனக்கு எழுத வேண்டியதுள்ளது. அதாவது இப்போது நமது இந்த அன்பான நண்பர் இந்த உலகில் இல்லை. அவரை கருணை மிக்க இறைவன் உயரிய சுவர்க்கத்தின் பக்கம் அழைத்துக் கொண்டான். நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பி செல்பவர்கள்; நிச்சயமாக நாம் அவரது பிரிவால் துக்கத்தில் இருப்பவர்களாவோம். மக்ஃபூர் மற்றும் மர்ஹூம் ஹாஜி சாஹிப் அவர்கள் ஒரு பெரும் ஜமாஅத்தின் தலைவராக இருந்தார்கள். அவர்களது சீடர்களிடம் நேர்வழி மற்றும் நற்பேற்றின் அடையாளங்களும் சுன்னத்தை பின்பற்றுவதும் மிகுதியாக தென்படுகிறது. இவர்கள் இந்த எளியவன் பைஅத் வாங்க ஆரம்பிப்பதற்கு முன்னரே வஃபாத்தாகி விட்டார்கள். ஆனால் இந்த விஷயத்தை அவர்களது அற்புதங்களில் ஒன்றாக நான் காண்கின்றேன். அவர்கள் இறையில்லமான கஅபாவிற்கு செல்ல எண்ணியதும் அதற்கு சில நாட்கள் முன்னதாக இந்த எளியவனுக்கு எந்த அளவு பணிவுடன் ஒரு கடிதத்தை எழுதியுள்ளார்கள் என்றால் அக்கடிதத்தின் மூலமாக அவர்கள் உண்மையில் உள்ளத்தால் பைஅத் செய்து தன்னை இவ்வியக்கத்தில் இணைத்துக் கொண்டார்கள்.

எனவே, அவர்கள் இக்கடிதத்தில் நல்லவர்களின் வாழ்வில் தனது தவ்பாவை வெளிப்படுத்திக் காட்டினார்கள். மேலும் தனது பாவமன்னிப்பிற்காக துஆ செய்யுமாறு வேண்டியுள்ளார்கள். இறைவனுடன் உங்களிருக்கும் தொடர்பான நிழலின் கீழ் நான் இருப்பதாக கருதுகின்றேன் என்று அவர்கள் எழுதியுள்ளார்கள். உங்களது ஜமாஅத்தில் நான் சேர்ந்து விட்டேன் என்பது தான் எனது வாழ்வின் மிகச் சிறந்த பகுதியாகும் என்றும் எழுதியுள்ளார்கள். தனது பணிவை வெளிப்படுத்தும் வகையில் தனது கடந்த நாட்கள் எவ்வாறு கழிந்தன என்பது தொடர்பான தனது முறையீட்டை எழுதியிருந்தார்கள். உருக்கமான பல சொற்களை எழுதியுள்ளார்கள். அவற்றை படிக்கும் போது அழுகை வருகின்றது. வேதனை நிறைந்த வாக்குகளால் நிரம்பி காணப்பட்ட அந்த நண்பரின் இறுதி கடிதம் இப்போது வரை என்னிடம் இருக்கின்றது. ஆனால், வேதனை என்னவென்றால் பைத்துல்லாஹ்விற்கு சென்று ஹஜ் செய்துவிட்டு திரும்பி வருகின்ற சமயத்தில் மீண்டும் நோயின் தாக்கம் எந்த அளவு மிகுதியாக அந்த தொண்டரை பற்றிக் கொண்டது என்றால் தொலை தூரத்தில் இருந்த அவர்களுக்கு என்னை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. சில நாட்களுக்கு பிறகே அவர்கள் வஃபாத்தான செய்தியை கேட்டு அந்த செய்தியை கேட்டவுடன் காதியானில் அவர்களுக்காக ஜமாஅத்தாக ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்பட்டது. மர்ஹூம் ஹாஜி சாஹிப் அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் வீரமிக்க மனிதராக இருந்தார்கள். சில புரியும் திறன் இல்லாத மக்கள் ஹாஜி சாஹிப் அவர்களை இந்த எளியவனின் சீடராக இருந்து அத்தகைய தொடர்பை வைப்பதிலிருந்து தடை செய்தனர். இதில் உங்களது மகிமைக்கு குறைவு ஏற்பட்டுவிடும் என்று கூறினர். ஆனால், அவர்களோ எனக்கு எந்த மகிமையை பற்றிய கவலையும் இல்லை. எனது சீடர்களின் தேவையும் இல்லை என்று கூறிவிட்டார்கள். அவர்களது புதல்வரான சாஹிப் ஸாதா கலான் ஹாஜி இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்களது அடிச்சுவட்டை பின்பற்றியவாறு இந்த எளியவனுடன் மிகவும் சிறந்த நிலையிலுள்ள கலப்பற்ற மனத்தூய்மையுடன் தொடர்பு வைத்துள்ளார்கள். நேர்மை, நன்மை, இறையச்சம் ஆகியவை அவர்களது முகத்தில் தெரிகின்றது. இறைவன் மீது நம்பிக்கை வைத்தவாரே அவர்கள் தமது வாழ்நாளை கழித்து வந்தாலும் தொண்டு செய்வதில் முதல் தகுதியில் இருக்கின்றார்கள். உள்ளத்தாலும் உயிராலும் இவ்வழியில் அவர்கள் வந்துவிட்டார்கள். இறைவன்

(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பத்ர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்:
Proprieter Nigran Badr Board Qadian.

# ஜுமுஆ பேருரை

நாம் ரமலானின் இறுதி பத்து நாட்களில் இருக்கின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கூற்றிற்கிணங்க நாம் அல்லாஹ்வின் ரஹ்மத் அதாவது கருணை மற்றும் மக்ஃபிரத் அதாவது பாவமன்னிப்பு கோருதல் ஆகிய இரு பத்துகளை கடந்து நரகத்திலிருந்து இரட்சிப்பு வழங்கக்கூடிய பத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த நாட்கள் சந்தேகமின்றி கருணை, பாவமன்னிப்பு மற்றும் நரகத்திலிருந்து இரட்சிப்பிற்கான நாட்களாகும். ஆனால், நாம் இந்த நாட்களின் அருட்களிலிருந்து பலன் பெற்றிருக்கின்றோமா ? அல்லாஹ் மற்றும் அவனது தூதருடைய கட்டளைகள் மற்றும் கூற்றுக்கள் நிபந்தனைகள் இல்லாமல் இல்லை. அவற்றுடன் ஒரு சில நிபந்தனைகளும் இருக்கின்றன. ஆக, இந்த நாட்களின் ரஹ்மத்துகளிலிருந்து அருளை பெறுவதற்கு ஒரு சில நிபந்தனைகள் இருக்கின்றன. மேலும் இந்த நாட்களில் அல்லாஹ்வினுடைய பாவமன்னிப்பிலிருந்து பலன் பெறுவதற்கும் ஒரு சில நிபந்தனைகள் இருக்கின்றன. மேலும் நரகத்திலிருந்து இரட்சிப்பு பெறுவதற்கும் ஒரு சில நிபந்தனைகளைப் பேணுவது அவசியமாகும்.

துஆக்களை ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும் என்றால் முஹ்ஸினாக ஆக வேண்டியது அவசியமாகும். சாதாரண நன்மைகளை செய்து மனிதன் முஹ்ஸினாகி விட முடியாது. மாறாக, இந்த தரத்தை அடைவதற்கு தன்னுடைய அமல்களை உயர்வான தரம் வரை எட்ட வைப்பது அவசியமாகும்.

இந்த ரஹ்மத்தை ஈர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லது முயற்சி செய்ய வேண்டும். அது தற்காலிகமானதாகவும் மேலும் தற்காலிகமாக தண்டனையிலிருந்து காப்பாற்றக்கூடியதாகவும் பிறகு காலம் கடந்த பிறகு நாம் முந்தைய நிலைக்கே கொண்டு வரக்கூடியதாகவும் இல்லாமல் எப்போதும் நம்மோடு இருக்க வேண்டும்.

எப்போதும் இறைவன் என்னைப் பார்க்கின்றான் என்ற உணர்வு உள்ளவரே உண்மையான முஹ்ஸின் ஆவார். இந்த உணர்வு இருக்கும் போது அதாவது இறைவன் என்னை பார்க்கின்றான் என்ற உணர்வு இருக்கின்ற போது இறைவனை பற்றிய அச்சம் எழுகின்றது. அப்போது தான் மனிதன் தீமையிலிருந்து தவிர்ந்திருக்கின்றான்.

பெருமானார் (ஸல்) அவர்களின் பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களாகிய நாம் நம்முடைய நிலைமைகளில் புரட்சியை ஏற்படுத்தியவாறு நம்முடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனுடைய விருப்பத்தை பெற்று தரும் வகையில் நம்முடைய ஈமானின் தரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். நாம் நம்மை ஆராய்ந்தவாறு நம்முடைய வாழ்க்கையை கழிக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் ரமலானின் அருள்கள் எப்போதும் நம்மில் நிலைபெற வேண்டும்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 10 ஜூலை 2015 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1394 –ஆம் ஆண்டு வஃபா மாதம் 10 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ -

அல்லாஹ்வின் அருளால் இன்றுடன் 22 நோன்புகள் கடந்து விட்டன. அல்லது 22 வது நோன்பு நடந்து கொண்டிருக்கின்றது. நாம் ரமலானின் இறுதி பத்து நாட்களில் இருக்கின்றோம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கூற்றிற்கிணங்க நாம் அல்லாஹ்வின் ரஹ்மத் அதாவது கருணை மற்றும் மக்ஃபிரத் அதாவது பாவமன்னிப்பு போருதல் ஆகிய இரு பத்துகளை கடந்து நரகத்திலிருந்து இரட்சிப்பு வழங்கக்கூடிய பத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம்.

(அல்ஜாமிவு லி ஷுஅபில் ஈமான். கிதாபுஸ் ஸியாமி. பாபு ஃபபஸாயிலு ஷஹ்ரி ரமழான். தொகுதி 5 பக்கம் 224. மக்தபதுர்ருஸ்து. 2004 ஆம் ஆண்டு பதிப்பு. ஹதீஸ் நம்பர் 3336)

இது அல்லாஹ்வின் மாபெரும் பேருபகாரமாகும். அவன் இந்த நற்பேற்றை நமக்கு வழங்கியிருக்கின்றான். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ள மேலும் இறையச்சத்தை மேற்கொள்ள முயற்சி செய்யக்கூடிய ஒரு நம்பிக்கையாளரின் உள்ளத்தில் அல்லாஹ்வினுடைய அச்சம் நிரம்பி இருக்கிறது, மேலும் அல்லாஹ் இந்த நாட்களை எனக்கு வழங்கியிருக்கின்றான். இரட்சிப்பிற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கின்றான் என்று மட்டும் அவர் சந்தோஷம் கொள்ள முடியாது. இந்த நாட்கள் சந்தேகமின்றி கருணை, பாவமன்னிப்பு மற்றும் நரகத்திலிருந்து இரட்சிப்பிற்கான நாட்களாகும். ஆனால், நாம் இந்த நாட்களின் அருட்களிலிருந்து பலன் பெற்றிருக்கின்றோமா ? அல்லாஹ் மற்றும் அவனது தூதருடைய கட்டளைகள் மற்றும் கூற்றுக்கள் நிபந்தனைகள் இல்லாமல் இல்லை. அவற்றுடன் ஒரு சில நிபந்தனைகளும் இருக்கின்றன.

ஆக, இந்த நாட்களின் ரஹ்மத்துகளிலிருந்து அருளை பெறுவதற்கு ஒரு சில நிபந்தனைகள் இருக்கின்றன. மேலும் இந்த நாட்களில் அல்லாஹ்வினுடைய பாவமன்னிப்பிலிருந்து பலன் பெறுவதற்கும் ஒரு சில நிபந்தனைகள் இருக்கின்றன. மேலும் நரகத்திலிருந்து இரட்சிப்பு பெறுவதற்கும் ஒரு சில நிபந்தனைகளைப் பேணுவது அவசியமாகும். ஆக, நாம் இவற்றிலிருந்து பலன் பெறுவதற்கு அல்லாஹ்வை திருப்திபடுத்தியவாறு அவனுடைய அருட்களுக்கு காரணமாக்கக்கூடிய விஷயங்களை தேட வேண்டிய தேவை இருக்கின்றது.

அல்லாஹ்வினுடைய ரஹ்மத் தொடர்பாக ஒரு சில விரிவுரையாளர்கள் இரண்டு வகைகளை கூறுகின்றனர். அதாவது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து பேருபகாரமாக இருப்பது ஒரு வகையான ரஹ்மத்தாகும். மனிதன் அதை பெறுவதற்காக குறிப்பான முயற்சிகள் எதையும் மேற்கொள்வதில்லை. அதற்கு உதாரணமாக அல்லாஹ் கூறுகின்றான். அதாவது என்னுடைய ரஹ்மத் எல்லாவற்றின் மீதும் மேலோங்கி இருக்கின்றது. (7:157) அல்லாஹ்வின் இந்த ரஹ்மத்திலிருந்து அனைத்து மக்களும் பலன் பெறுகின்றனர். எவ்வித அமலும் இல்லாமல் இந்த ரஹ்மத்திலிருந்து அவர்களுக்கு பலன் கிடைக்கின்றது.

ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக மேலும் இவ்வாறு கூறுகின்றார்கள். இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால் இந்த ரஹ்மத் பொதுவானதும் பரந்ததும் ஆகும். ஆனால் கோபம் அதாவது நீதி என்கிற பண்பு ஒரு குறிப்பான விஷயத்திற்கு பிறகு ஏற்படுகின்றது. அதாவது அந்த பண்பு இறை சட்டத்தை மீறிய பிறகு தன்னுடைய உரிமையை உருவாக்குகின்றது. அதற்கு முதலில் இறை சட்டம் இருக்க வேண்டும். மேலும் இறை சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு பாவம் ஏற்பட வேண்டும். பிறகு இந்த பண்பு வெளிப்படுகிறது என்பது நிச்சயமானதாகும். மேலும் தன்னுடைய எதிர்பார்ப்பை அது பூர்த்தி செய்ய விரும்புகின்றது. (ஐங்கே முகத்தஸ் ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 207)

ஆக, அல்லாஹ் தன்னுடைய அடியார்கள் மீது கருணையாளனாக இருக்கின்றான். அவர்கள் மீது கருணை காட்டுகின்றான். ஆனால் மனிதன் இறை சட்டத்தை மீறி கோபம் மற்றும் தண்டனைக்கு ஆளாகும் போது (சின்னச்சின்ன தவறுகளை அல்லாஹ் மன்னித்துக் கொண்டே செல்கின்றான். ஆனால்) எல்லையைக் கடக்கும் போது அல்லாஹ்வினுடைய அத்ல் அதாவது நீதியை நிலைநாட்டுதல் என்ற பண்பு மற்ற பண்புகளை

செயல்பட வைக்கின்றது. ஆனால் பொதுவாக அல்லாஹ்வினுடைய கருணை எல்லாவற்றையும் சூழ்ந்து இருக்கின்றது. ஆனால் சில சமயம் நீதியை நிலைநாட்டுதல் அல்லது இறை சட்டத்தை மீறுதலின் எதிர்பார்ப்பு அவனுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதாகும். ஆனால் அல்லாஹ் பிறகும் கூட கருணை காட்டியவாறு மன்னித்து விடுகின்றான். ஆனால் இவ்வாறான நிலை ஒரு நம்பிக்கையாளருடைய நிலை இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அந்தஸ்து வேறாகும்.

உண்மையான ஈமானாக இருக்குமென்றால் அந்த ஈமானின் எதிர்பார்ப்பு என்னவென்றால் இந்த ஈமானிய நிலைகளை சரியாக வைப்பது மேலும் அல்லாஹ்வினுடைய கட்டளைகளுக்கேற்ப நடப்பதற்கு தமது சக்திக்கேற்ப முயற்சி செய்வதாகும். இந்த அனைத்து முயற்சிகளுக்கு பிறகும் ஏதேனும் மனித பலகீனத்தின் காரணத்தால் பாவம் நிகழ்ந்து விட்டால் பிறகு அல்லாஹ்வினுடைய கருணை அந்த பாவத்தை மறைத்து விடுகின்றது. நான் கடந்த ஏதோவொரு குத்பாவில் கூறியது போன்று மனிதன் பாவத்தில் துணிந்து அல்லாஹ்வினுடைய கருணை மிகவும் பரந்ததாகும். எனவே எந்த கவலையும் இல்லை என்ற நிலை இருக்க கூடாது. இது போன்ற விஷயங்கள் அல்லாஹ்வினுடைய கோபத்தை தூண்டக்கூடியவையாகும்.

அல்லாஹ்வினுடைய கருணை எவ்வாறு கோபத்தை மறைத்து விடுகின்றது என்பது பற்றி தெளிவுபடுத்தியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

வாக்குறுதியில் இறைவன் தன்னுடைய குத்தூஸிய்யத் என்ற பண்பின் காரணமாக குற்றவாளிக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று மட்டும் தான் எதிர்பார்க்கின்றான். சில சமயம் இந்த எதிர்பார்ப்பின் காரணத்தினால் தான் வஹி அனுப்புபவர்களுக்கு இது பற்றி அறிவிக்கவும் செய்கின்றான். அதாவது தன்னுடைய நபிமார்களுக்கு இல்ஹாம் மூலம் இன்ன நபர் துணிந்து கொண்டே செல்கின்றார். நான் அவனுக்கு தண்டனை கொடுக்கப் போகிறேன் என்று அறிவிக்கின்றான். பிறகு என்ன நிலை ஏற்படுகின்றதென்றால் குற்றவாளி உருக்கத்தை மேற்கொண்டு பாவமன்னிப்பு கோருவதன் மூலம் அதற்கான உரிமையை செலுத்தும் போது இறை கருணையின் எதிர்பார்ப்பு இறை கோபத்தின் எதிர்பார்ப்பை விட மேலோங்கி விடுகின்றது.

சில சமயம் அறிவிக்கப்படுகின்றது. தண்டனை விதிக்கப்பட்டும் விடுகின்றது. தீர்ப்பாகி விடுகின்றது. ஆனால் எவர் தொடர்பாக தீர்ப்பாகி விடுகின்றதோ அவர் பாவமன்னிப்பு கோருவார் எனில் பிறகு தண்டனையிலிருந்து தப்பிக்கவும் முடியும்.

அவர்கள் கூறினார்கள்: இறைக் கருணையின் எதிர்பார்ப்பு கோபத்தின் எதிர்பார்ப்பை விட மேலோங்கி விடுகின்றது. மேலும் அந்த கோபத்தை தன்னுள் திரையிட்டு விடுகின்றது. மறைத்து விடுகின்றது.

இதே பொருள் தான் இந்த வசனத்திற்கும் ஆகும். அதாவது என்னுடைய ரஹ்மத் என்னுடைய கோபத்தை விட மேலோங்கி விட்டது என அல்லாஹ் கூறுகின்றான்.

(துஹ்ஃபா கஸ்னவிய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 537)

ஆக, பாவிகளைக்கூட அல்லாஹ் அவர்கள் பாவமன்னிபு கோருவதால் மன்னிக்கின்றான். எவர்கள் மீது தண்டனை விதிக்கப்படுகின்றதோ அவர்களையும் மன்னித்து விடுகின்றான்.

அன்னார் கூறினார்கள்: தண்டனை கடமையாகிவிட்ட பாவிகளைக்கூட அவர்கள் உருக்கத்தை மேற்கொள்ளும் போது அல்லாஹ் அவர்களை மன்னித்து விடுகின்றான். மாறாக, நான் ஏற்கெனவே கூறியது போன்று ஒரு சிலரின் தண்டனை தொடர்பாக தன்னுடைய நபிமார்களுக்கு அவன் அறிவித்து விடுகின்றான். ஆனால் பிறகும் கூட அந்த குற்றவாளியின் உருக்கம், அழுதல், பாவமன்னிப்பு கோருதல் போன்றவை அல்லாஹ்வின் கருணையை ஈர்த்து விடுகின்றன. எவ்வாறிருப்பினும், முதலில் இறை சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்ட பிறகு அழுது தொழுவதை மேற்கொண்டு பிறகு கருணையை தேடுதல் என்பது ஒரு நம்பிக்கையாளரின் தரம் அல்ல. நம்பிக்கையாளர் பற்றிய உதாரணம் வேறென்றாகும். இரண்டாவது வகை ரஹ்மத் அமல்களின் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். மேலும் அதைப்பற்றிய வாக்குறுதி நற்காரியங்கள் செய்யக்கூடியவர்கள் மற்றும் இறையச்சத்தை மேற்கொள்ளக்கூடியவர்களோடு தொடர்புடையதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான். (7:57) அதாவது நிச்சயமாக அல்லாஹ்வின் கருணை முஹ்ஸின்களுக்கு அதாவது நன்மை செய்பவர்களுக்கு அருகில் உள்ளது. முஹ்ஸின் என்பதன் பொருள் பிறருடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர் மேலும் தக்வாவின்படி நடப்பவர், அறிவுடையவர், அல்லாஹ்வால் தரப்பட்ட பணிகளை அனைத்து நிபந்தனைகளுடன் பூர்த்தி செய்பவர் என்பதாகும். ஆக, அல்லாஹ்வினுடைய ரஹ்மத் அல்லாஹ்வின் தண்டனை மீதுள்ள அச்சத்தால் அறிந்தே பாவம் செய்யாதவர்களோடு இருக்கின்றது என அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் தங்களினுடைய பாவத்தின் காரணமாக இறைவனின் தண்டனையின் அச்சத்தினால் இறைவனை நினைவு கூர்வதில்லை. அவர்கள் அறிந்தே பாவம் செய்பவர்கள் அல்லர். மாறாக, அறியாமல் ஏதேனும் ஒரு பாவம் நிகழ்ந்து விட்டால் இறையச்சத்தை மேற்கொள்ளும் போது பிறகு அல்லாஹ்வினுடைய கருணை அவர்கள் மீது இறங்குகின்றது. அவர்களுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. துஆக்களை ஏற்றுக் கொள்வது அல்லாஹ்வுடைய குறிப்பான ரஹ்மத்தாகும். அதில் எவ்வித நிர்பந்தமும் இல்லை. நிச்சயமாக அவன் எங்களுடைய துஆக்களை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்று எவரும் நிர்பந்திக்கவும் முடியாது.

அல்லாஹ்வினுடைய ரஹ்மத் முஹ்ஸின்களோடு இருக்கின்றது என்றும் தக்வாவின்படி நடந்தவாறு தங்களுடைய வாழ்க்கையை கழிக்கின்றவர்களோடு இருக்கின்றது. மேலும் மற்றவர்களோடு நல்ல முறையில் நடந்து கொண்டு அவர்களினுடைய உரிமையை செலுத்துபவர்களோடு இருக்கின்றது என்றும் அல்லாஹ் கூறுகின்றான்.

ஆக, துஆக்களை ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும் என்றால் முஹ்ஸினாக ஆக வேண்டியது அவசியமாகும். மேலும் முஹ்ஸினின் இந்த பொருளை கண்முன் நிறுத்தி முஹ்ஸினாக வேண்டியதும் அவசியமாகும். ஆக, இது சாதாரண விஷயமல்ல. சாதாரண நன்மைகளை செய்து மனிதன் முஹ்ஸினாகி விட முடியாது. மாறாக, இந்த தரத்தை அடைவதற்கு தன்னுடைய அமல்களை உயர்வான தரம் வரை எட்ட வைப்பது அவசியமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹ்ஸினுக்கு கூறிய இலக்கணத்தை மனிதன் கண்முன் வைத்தால் அச்சத்தால் கவலையடைந்து விடுகின்றான். நம்முடைய இறைவணக்கங்களின் நிலைமை இவ்வாறு தான் இருக்கின்றதா? நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலிலும் இந்த நிலைமை இருக்கின்றதா ? என்று கவலையடைகின்றான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இலக்கணம் என்னவென்றால் ஒவ்வொரு நற்செயல் செய்யும் போதும் அவர் இறைவனை பார்க்கின்றார் என்ற விஷயத்தை முன்னிருத்துபவரே முஹ்ஸினாவார். அல்லது குறைந்தபட்சம் இறைவன் அவரை பார்க்கின்றார் என்ற உணர்வாவது இருக்க வேண்டும்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமானி பாபு சவாலி ஜிப்ரீல் லின்னபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அனில் ஈமானி வல் இஸ்லாமி வல் இஹ்ஸானி வ இல்முஸ் ஸாஅ ஹதீஸ் நம்பர் 50)

இந்த நிலைமை நமது இறைவணக்கங்களிலும் இருக்க வேண்டும். மேலும் பிற பணிகளை செய்யும் போதும் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் போது தவறான செயல் ஒருபோதும் நடக்கவே முடியாது. ஒருபோதும் நாம் தக்வாவிலிருந்து விலகவே முடியாது. ஒருபோதும் நாம் எவரோடும் தீய முறையில் நடந்து கொள்ளவே முடியாது. ஒருபோதும் பிறருடைய உரிமைகளை பறிக்கவே முடியாது. மாறாக, ஒருவருக்கு இழப்பை ஏற்படுத்துவது, அவரின் உரிமையை பறிப்பது பற்றி சிந்திக்கவே முடியாது.

ஆக, இஸ்லாத்தின் கட்டளைகள் எப்படிப்பட்டவையாக இருக்கிறன்றனவென்றால் எவ்வகையில் அமல் செய்தாலும் அல்லது அல்லாஹ்வினுடைய ஏதேனும் கட்டளையை பின்பற்றினாலும் அல்லது அவனுடைய ரஸூல் (ஸல்) அவர்களின் எந்த கட்டளையைப் பார்த்தாலும் அல்லது எந்த கூற்றை பார்த்தாலும் அவை நம்மை இறைவனுக்குரிய உரிமைகள் மற்றும் இறைப்படைப்பினங்களுக்குரிய உரிமையின் பக்கமே எடுத்துச் செல்கின்றன. நம்முடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நாம் அல்லாஹ்வின் ரஹ்மத்திற்கு வாரிசாக வேண்டும். மேலும் அதை பெற வேண்டும் என்று நாம் மிகவும் ஆசைப்படுகின்றோம். ஆனால், அதை அடைவதற்கு நம்மில் பெரும்பாலார் ஒரு நம்பிக்கையாளர் பெற வேண்டிய தரத்தை அடைவதற்கு முயற்சி செய்வதில்லை. அல்லது தொடர்ந்து நாம் முயற்சி செய்வதில்லை. அல்லாஹ்வின் கருணையின் பத்து நாட்களை நாம் கடந்தோம் என்று நாம் சந்தோஷமடைந்து விடுகின்றோம். ஆனால், இந்த கருணையை பெறுவதற்கு நாம் என்ன செய்தோம் ? அல்லது நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை. தற்காலிகமாக இறைவணக்கங்களை மேற்கொண்டு குற்றவாளிக்கு கிடைக்கும் தண்டனையிலிருந்து தப்பினோமா? அல்லது நாம் முஹ்ஸின்களோடு இணைந்து நம்முடைய வாழ்க்கையை தக்வாவில் எப்போதும் நிலைத்திருப்போம் என்றும் பிறருக்கு நன்மை செய்வோம் என எப்போதும் உடன்படிக்கை செய்து கொள்பவர்களோடும் மேலும் ரமலானில் தன்னுள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்த முயற்சி செய்பவர்களோடு ஆனோமா ?

ஆக, இந்த ரஹ்மத்தை ஈர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லது முயற்சி செய்ய வேண்டும். அது தற்காலிகமானதாகவும் மேலும் தற்காலிகமாக தண்டனையிலிருந்து காப்பாற்றக்கூடியதாகவும் பிறகு காலம் கடந்த பிறகு நம்மை நமது முந்தைய நிலைக்கே கொண்டு வரக்கூடியதாகவும் இல்லாமல் எப்போதும் நம்மோடு இருக்க வேண்டும். ஆக, ரஹ்மத் என்ற இந்த ஒரு வார்த்தை பெருமானார் (ஸல்) அவர்கள் நம்முடைய செயல் திட்டத்திற்கான ஒரு கருவூலத்தை வழங்கியிருக்கின்றார்கள். இந்த ரஹ்மத்தை முதல் பத்து நாட்களில் தேடுங்கள். இந்த ரஹ்மத்தை தேடிய பிறகு இதை நம்முடைய வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டும். ஒரு நம்பிக்கையாளருக்கு இந்த பத்து நாட்களின் தர்பிய்யத் பிறகு அடுத்த பாதையை காட்டுகின்றது. ஷய்த்தான் எப்போதும் நம்மோடு இருக்கின்ற காரணத்தால் அவன் நம்மை வழிதவறச் செய்வதில் மூழ்கி இருப்பதால் மேலும் நன்மையை செய்வதிலிருந்து தடுப்பதில் மூழ்கியிருக்கின்ற காரணத்தினால் இந்த ரஹ்மத்தை அடைந்த பிறகு அதன் மீது நிலைத்திருப்பதற்கு அல்லாஹ்வின் உதவியின் தேவை இருக்கின்றது. மேலும் இந்த உதவியைப் பெறுவதற்கு நாம் என்ன வழிமுறைகளை கையாள வேண்டும்?

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு அடுத்த பத்து நாட்கள் அது உங்களுடைய நிலையான அமலாக ஆகிவிடுவதற்கு அல்லாஹ்வினுடைய ஆற்றலை தேடுங்கள். அந்த ஆற்றல் இஸ்திக்ஃபார் அதாவது பாவமன்னிப்பு கோருதல் ஆகும்.

அன்னார் கூறினார்கள்: இரண்டாவது பத்து நாட்கள் மக்ஃபிரத்திற்கான அதாவது பாவமன்னிப்பிற்கான பத்து நாட்களாகும். ஏற்கனவே கூறப்பட்டது போன்று இறைவன் முன்னிலையில் அழுது மன்றாடுபவர்களது பாவங்களை மன்னித்து அல்லாஹ் அவரை தன்னுடைய பாவமன்னிப்பின் ஆடையில் போர்த்தி விடுகின்றான். அவர்களின் மீது கருணையும், அருளும் புரிகின்றான். ஆனால், இந்த மறைத்தல் மற்றும் கருணையை தன்னுடைய வாழ்வின் அங்கமாக ஆக்குபவரே முஃமின் ஆவார். இது அவரின் இறைவணக்கங்கள் மூலமாகவும் வெளிப்பட வேண்டும். பிற அமல்களின் மூலமாகவும் வெளிப்பட வேண்டும். தொடர்ந்து பாவமன்னிப்பு கோரியவாறு தன்னுடைய அமல்களை ஆராய்ந்தவாறு இருக்கும் போது அல்லாஹ்வினுடைய மக்ஃபிரத் நம்மை அதனுள்ளே போர்த்திக் கொள்ளும். அவனின் அருட்களின் வாயில்கள் நம்மீது திறந்து கொண்டே செல்லும். இது இருக்கும் போது பிறகு நன்மையில் நிலைத்திருப்பதற்கான நல்வாய்ப்பையும் அல்லாஹ் நமக்கு வழங்கிக் கொண்டே செல்வான்.

ஒரு நம்பிக்கையாளருக்கு மக்ஃபிரத் அதாவது பாவமன்னிப்பின் உண்மைத்துவம் என்ன ? மேலும் அதனை பெறுவதற்கு என்ன வழிமுறைகளை கையாள வேண்டும் ? மேலும் எவ்வாறு பாவமன்னிப்பு கோர வேண்டும் ? என்பது தொடர்பாக ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனித பலகீனங்கள் வெளிப்படாமல் இருக்க வேண்டும். மேலும் இறைவன் தன்னுடைய ஆற்றலின் உதவியை மனித இயல்பிற்கு வழங்க வேண்டும். மேலும் தன்னுடைய உதவியின் வட்டத்திற்குள் அதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவதே இஸ்திக்ஃபார் அதாவது பாவமன்னிப்பு கோருதல் என்பதன் உண்மையான பொருளாகும். இந்த சொல் கஃபர என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது. இதன் பொருள் மூடுதல் என்பதாகும். ஆக, இதனுடைய பொருள் என்னவென்றால், இறைவன் தன்னுடைய ஆற்றல் மூலமாக பாவமன்னிப்புக் கோரக்கூடியவரின் இயல்பின் பலகீனத்தை மூடுதல் என்பதாகும். தொடர்ந்து பாவமன்னிப்புக் கோருவதன் மூலம் அல்லாஹ் அதனை மூடி மறைத்தும் விடுகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவன் தன்னுடைய ஆற்றல் மூலமாக பாவமன்னிப்பு கோரக் கூடியவரை அவரது இயல்பான பலகீனங்களிலிருந்து காப்பாற்றி தன்னுடைய சக்தியினால் சக்தியை வழங்கி தன்னுடைய அறிவினால் அறிவை வழங்கி மேலும் தன்னுடைய ஒளியால் ஒளியை வழங்குவதாகும் என்பதே இதன் உண்மையான பொருளாகும். இறைவன் மனிதனைப் படைத்து அவனை விட்டு பிரிந்து சென்று விடவில்லை. மாறாக, அவன் எவ்வாறு மனிதனை படைத்தவனாக இருக்கின்றானோ மேலும் அவனுடைய அக மற்றும் புற ஆற்றல்களைப் படைத்தவனாக இருக்கின்றானோ அவ்வாறே மனிதனின் கய்யூமாகவும் அதாவது நிலைத்திருப்பவனும், நிலைபெறச் செய்பவனாகவும் இருக்கின்றான். இறைவன் எதை எல்லாம் படைத்திருக்கின்றானோ அவற்றை தன்னுடைய குறிப்பான உதவியினால் பாதுகாக்கவும் செய்கின்றான். மேலும் அவற்றை நிலைபெறச் செய்யக்கூடியவனாகவும் இருக்கின்றான். இறைவனுடைய பெயர் கய்யூம் ஆகும். அதாவது தன்னுடைய உதவியினால் படைப்பினங்களை நிலைபெறச் செய்பவனாக அவன் இருக்கின்ற போது மனிதன் இறைவனுடைய காலிக்கிய்யத் அதாவது படைக்கும் பண்பின் மூலம் உருவாகியதைப் போன்று தன்னுடைய படைப்பின் வடிவத்தை இறைவனுடைய கய்யூமிய்யத் அதாவது நிலைபெறச் செய்யும் பண்பின் மூலம் அதனை பாதுகாப்பதும் சீர்குலைவதிலிருந்து காப்பாற்றுவதும் மனிதனின் கடமையாகும்.

(இஸ்மத்தே அன்பியா ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 671)

ஆக, மனிதனுடைய ஓர் இயல்பான தேவைக்கு ஏற்ப பாவமன்னிப்பு கோருமாறு வழிகாட்டப்பட்டுள்ளது. அவன் கெட்டுப் போவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கும் அல்லாஹ்வின் கய்யூமிய்யத் என்ற பண்பிலிருந்து பலன் பெறுவதற்கும் தன்னுடைய ஆன்மீக நிலைமைகளை எப்போதும் நிலைபெறச் செய்வதற்கும் இஸ்திக்ஃபார் அதாவது பாவமன்னிப்பு கோருங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். ஆக, ரமலானில் மக்ஃபிரத் அதாவது பாவமன்னிப்பின் பக்கம் கவனமூட்டப்பட்டிருக்கின்ற அதே வேளையில் இந்த ஆன்மாவை முன் நிறுத்துமாறும் கவனமூட்டப்பட்டுள்ளது. அவனுடைய கருணையிலிருந்து தொடர்ந்து பலன் பெற வேண்டுமென்றால் இஸ்திக்ஃபார் செய்யுங்கள். அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கோருங்கள். இறைவன் தன்னுடைய அடியார்களின் மீது குறிப்பாக இந்த நாட்களில் கருணையாளனாக இருக்கின்ற அதே நேரத்தில் தன்னுடைய அடியார்களின் மீது ரஹ்மத்தின் இரண்டு அருட்களையும் வழங்குகின்றான். அதாவது முதலாவது ஒரு சாதாரண அருள். அதிலிருந்து ஒரு முஃமின் மற்றும் முஃமின் அல்லாதவர்களும் பலன் பெறுகின்றனர். இன்னொரு குறிப்பான அருள் அது முஹ்ஸின்களோடு மட்டும் நிபந்தனைக்குட்பட்டதாகும். அதிலிருந்தும் நாம் பலன் பெறுபவர்களாக ஆக வேண்டும். முஹ்ஸின்களோடு மட்டும் தொடர்புடைய இந்த அருளிலிருந்து பலன் பெறுவதற்கு நன்மையை செய்வதற்கு ஆற்றலை தேடும் முயற்சியை ஒரு முஃமின் செய்கின்ற அதே வேளையில் இஸ்திக்ஃபர் மூலமாக அல்லாஹ்வின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற வேண்டும். மேலும் அல்லாஹ்வின் ஆற்றலிலிருந்து ஆற்றலைப் பெற வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வினுடைய ஒளியிலிருந்து விலகியவாறு இருளில் வழிதவறி செல்பவராக ஒருபோதும் ஆகாமல் இருக்க வேண்டும். அல்லது அல்லாஹ்வின் ஆற்றலிலிருந்து பலன் பெறாமல் ஷய்த்தானின் வலையில் வீழ்ந்து விடக்கூடாது. அல்லாஹ்வினுடைய அருள் நம்மோடு இல்லை என்றால் ஷய்த்தானின் தாக்குதல் மிகவும் வலுவானதாகும். அவன் உடனடியாக தனது வலையில் சிக்க வைக்கின்றான். எனவே, இஸ்திக்ஃபார் செய்வது அதாவது பாவமன்னிப்பு கோருவது மிகவும் அவசியமாகும். அதன் மூலம் அல்லாஹ்வின் ஆற்றலைப் பெற்று எப்போதும் ஷய்த்தானிடமிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

மனிதன் இயல்பாகவே பலகீனமாக இருக்கின்றான். மேலும் இந்த பலகீனத்திலிருந்து தப்பிப்பதற்கும் அல்லாஹ்வின் ஆற்றலிலிருந்து ஆற்றலைப் பெறுவதற்கும் இஸ்திக்ஃபார் அவசியமானதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

மனிதன் தன்னுடைய நன்மையில் நிலைத்திருப்பதற்கும், அல்லாஹ்வின் அருளில் எப்போதும் இருப்பதற்கும் அல்லாஹ்வின் உதவியின் தேவை இருக்கின்றது. அது இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. அல்லாஹ் தனது பெயரை கய்யூம் என்று வைத்து நன்மையை நிலையாக வைப்பதற்கும் மேலும் மக்ஃபிரத் அதாவது பாவமன்னிப்பிலிருந்து எப்போதும் பலன் பெறுவதற்கும் அல்லாஹ்வினுடைய உதவி தேவை இருக்கின்றது என்று கூறுகிறான். அதாவது அல்லாஹ்வினுடைய கய்யூமிய்யத் அதாவது நிலைத்திருப்பது, நிலைத்திருக்கச் செய்பவது என்ற பண்பு நீங்கள் ஏதேனும் ஒன்றை எப்போதும் நிலைபெறச் செய்ய வேண்டுமென்றால் எந்நிலையிலும் உங்களுக்கு என்னுடைய உதவியின் தேவை இருக்கின்றது. என் பக்கம் வாருங்கள் என்பதை கூறுகின்றது. இந்த உதவியை ஒருபோதும் விட்டுவிட வேண்டாம் என்று அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் எப்போதும் நிலைத்திருக்கக் கூடியவனாவான். நிலைத்திருக்கச் செய்கின்றான். மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக வலுவான துணையும் ஆவான்.

ஆக, நடுப் பத்து நாட்கள் மக்ஃபிரத் அதாவது பாவமன்னிப்பிற்கான பத்து நாட்கள் என்பதன் பொருள் இதில் எவ்வளவு பாவமன்னிப்பு கோர வேண்டுமோ கோரிக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் இவ்வாறு செய்தால் உங்களுடைய நோக்கத்தை அடைந்து விட்டீர்கள் என்பது பொருளல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ரமலான் வந்தால் அல்லாஹ் தன்னுடைய அடியாருக்கு அருகில் வந்தான். உங்களுடைய கவனமும் நோன்பு மற்றும் துஆக்களின் பக்கம் இருந்தது. இப்போது உங்களுடைய நன்மையை தொடர்ந்து செய்வதற்கு அல்லாஹ்வின் கருணையிலிருந்து தொடர்ந்து பலன் பெறுவதற்கு மேலும்

நம்முடைய இயல்பின் பலகீனத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கும் அல்லாஹ்வின் சந்நிதியில் பாவமன்னிப்பு கோரியவாறு அவனுடைய இரட்சிப்பில் வந்து விடுங்கள். மேலும் இந்த நிலைமை நிலையானதாக இருக்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்யுங்கள் என்று கவனமூட்டியுள்ளார்கள். நம்மில் பெரும்பாலார் இந்த சிந்தனையுடன் அல்லாஹ்வுடைய பாவமன்னிப்பை கோரி இரண்டாவது பத்து நாட்களை கடக்கக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. அல்லது கடந்து விட்டவர்களாக ஆக்குவானாக. இந்த பத்து கடந்தும் விட்டது. மேலும் அல்லாஹ்விடமிருந்து பெற்ற ஒளி மற்றும் ஆற்றல் அல்லாஹ்வினுடைய விருப்பத்தின் சொர்க்கத்தில் நம்மை எடுத்துச் செல்லக்கூடியதாக நம்மை ஆக்கட்டுமாக என்ற எண்ணத்துடன் மூன்றாவது பத்தில் நுழையக்கூடியவர்களாக ஆவோமாக. இன்ஷா அல்லாஹ். இறுதி பத்து நாட்கள் நரகத்திலிருந்து காப்பாற்றக்கூடிய பத்து நாட்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். மனிதன் இறைவனுடைய கருணையின் போர்வையினுள் வந்தால் அவனிடம் பாவமன்னிப்பு கோருவதன் மூலம் ஒளியின் ஆற்றலைப் பெற்று அதில் நிலைபெற்று விட்டால் அவனின் ஒளியிலிருந்து பங்கு பெற்றால் மேலும் அவனுடைய ஆற்றலினால் நிலைபெற்றால் அவன் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக்கூடியவராக இருப்பான் என்பது வெளிப்படையானதாகும். இறைவன் எவருக்கும் நற்கூலி வழங்காமல் விடுவதில்லை. அவன் அதிகம் வழங்கக்கூடியவன் ஆவான். மனிதன் இறைவனுக்காக நன்மைகளை செய்கின்ற போது அல்லது செய்ய முயற்சி செய்கின்ற போது நான் உன்னை நரகத்தில் போட மாட்டேன். நீ நரகத்திலிருந்து தப்பித்து விட்டாய் என்று மட்டும் அல்லாஹ் கூறவில்லை. மாறாக, நரகத்திலிருந்து தப்பிப்பதற்கான பத்தைப் பற்றி கூறி நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் இதுபோன்ற அமல் செய்பவர்களோடு பொருந்தி தன்னுடைய சொர்க்கத்திற்கான நற்செய்தியையும் வழங்குகின்றான் என கூறியுள்ளார்கள். ரமலான் வந்ததோடு நரகத்தின் வாயில்கள் அடைக்கப்பட்டிருக்கும் என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(சுனன் திரிமிதி கிதாபுஸ் ஸவ்ம் பாபு மா ஜாஅ ஃபீ ஷஹ்ரி ரமலான் ஹதீஸ் நம்பர் 682)

அந்நிலையில் நிலையான பாவமன்னிப்பை கோரிக் கொண்டிருப்பீர்கள் எனில் நன்மைகளை நிலைத்திருப்பதற்கு தொடர்ந்து அல்லாஹ்வை பற்றிப் பிடிப்பீர்கள் எனில் நரகத்தின் வாயில்கள் ரமலானில் மட்டும் அல்லாமல் இந்த 30 நாட்களின் இறைவணக்கங்கள் மற்றும் உடன்படிக்கைகள் மற்றும் உரிமைகளை நிறைவேற்றுதல் மேலும் பாவமன்னிப்புக் கோருதலின் நிலையான பழக்கமானது நரகத்தின் வாயில்களை எப்போதும் மூடிவிடும்.

சொர்க்கம் மற்றும் நரகத்தின் உண்மைத்துவம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைக்கின்றான். அன்னார் கூறுகின்றார்கள்:

மார்க்கத்தின் நோக்கம் என்ன ? அதன் நோக்கம் இறைவனுடைய இருப்பு மற்றும் அவனுடைய முழுமையான பண்புகளின் மீது நிச்சய உறுதியுடன் ஈமானை பெற்று மனிதன் மன இச்சைகளிலிருந்து இரட்சிப்பை பெற வேண்டும் என்பதாகும். மேலும் இறைவனோடு தனிப்பட்ட அன்பு உருவாக வேண்டும். ஏனென்றால் அதுவே சொர்க்கமாகும். அது மறுமை நாளில் பல்வேறு கோணங்களில் வெளிப்படும். மேலும் உண்மையான இறைவனை அறியாமல் இருப்பது மேலும் அவனை விட்டு விலகியிருப்பது மேலும் அவனோடு உண்மையான நேசம் கொள்ளாமல் இருப்பது போன்றவையே உண்மையில் நரகமாகும். இது மறுமை நாளில் பல்வேறு வகையாகவும் பல்வேறு கோணங்களிலும் வெளிப்படும். ஆக, இந்த கருத்தை நாம் புரிய வேண்டிய தேவை இருக்கின்றது. நரகத்திலிருந்து இட்சிப்பு கூட இவ்வுலகிலிருந்தே ஆரம்பமாகி விடுகின்றது. சொர்க்கம் கிடைப்பதும் இவ்வுலகிலிருந்தே ஆரம்பமாகி விடுகின்றது. மேலும் இவ்விரண்டினுடைய பரந்த தாக்கங்கள் பல்வேறு நிலைகளில் மனிதனுக்கு மறுமையில் வெளிப்படும்.

(சஷ்மயே மஸீஹி ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 350)

ஆக, அல்லாஹ்வோடு உண்மையான தொடர்பு, பாவமன்னிப்பு கோருதல் மனிதனுக்கு இவ்வுலகிலும் சொர்க்கத்தை காட்டுகின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று இதன் பரந்த அருட்கள் மறுமையிலும் கிடைக்கும். இறைவனோடு உண்மையான தொடர்பு மற்றும் அன்பு மேலும் அவனுடைய கருணை மற்றும் மன்னிப்பை எப்போதும் தேடாமல் இருப்பது அவனுடைய கட்டளைகளை அறிந்தே மீறுதலாகும். இது அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்குகின்றது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து சான்று காட்டி இவ்வாறு விளக்கமாக கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் கூறியிருக்கின்ற சொர்க்கம் மற்றும் நரகத்தின் உண்மைத்துவம் வேறு எந்த வேதங்களிலும் கூறப்படவில்லை. அது இந்த உலகத்திலிருந்தே இந்த தொடர் ஆரம்பமாகின்றது என்பதை மிகவும் தெளிவாக கூறியிருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான். (55:47) அதாவது எவர் எவர் இறைவனின் முன்னிலையில் நிற்பதற்கு அஞ்சுகின்றாரோ அவருக்கு இரண்டு சொர்க்கங்கள் உள்ளன. ஒரு சொர்க்கம் இந்த உலகிலேயே கிடைக்கின்றது. ஏனென்றால் இறைவனுடைய அச்சம் அவரை தீமையிலிருந்து தடுக்கின்றது. தீமையிலிருந்து தவிர்ந்திருப்பதனால் சொர்க்கம் கிடைக்கின்றது. மேலும் தீமையின் பக்கம் ஓடுவது உள்ளத்தில் ஒரு நிம்மதியின்மையை ஏற்படுத்துகின்றது. அது தானே ஓர் அபாயகரமான நரகமாகும். அல்லாஹ்வினுடைய அச்சம் தீமையிலிருந்து தடுக்கின்றது. மனிதன் தீமையிலிருந்து தவிர்ந்திருக்கும் போது நரகத்திலிருந்து பாதுகாப்பாகி விடுகின்றான். மேலும் தீமையின் பக்கம் ஓடுதல் மேலும் தீமையை செய்யக் கூடியவர் நிம்மதி அடைவதில்லை. எங்காவது அவருக்கு நிம்மதியற்ற நிலைமை இருக்கின்றது. தீமை செய்த பிறகு மனிதனுக்கு ஏற்படுகின்ற இந்த நிலைமையே ஒரு நரகமாகும்.

அவர்கள் கூறினார்கள்: எவர் இறைவனுக்கு அஞ்சி தீமையிலிருந்து விலகி இந்த தண்டனை மற்றும் அச்சத்திலிருந்து உடனடியாக தப்பித்துக் கொள்கிறாரோ அவர் தீமைகள் மற்றும் மன இச்சைகளுக்கு அடிமையானாலும் அவருடைய உள்ளத்தில் இறைவனுடைய அச்சம் இருக்குமேயானால் அவரும் தப்பித்துக் கொள்கிறார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

தீமைகளிலிருந்து மனிதன் தவிர்ந்திருந்தால் பிறகு நன்றியுணர்வு மற்றும் இறைவன் பக்கம் குனிவதில் மனிதன் முன்னேறுகின்றான். இதன் மூலமாக அவனுக்கு ஓர் இன்பம் வழங்கப்படுகிறது. இவ்வாறு இவ்வுலகிலிருந்தே அவருக்கு சொர்க்க வாழ்க்கை ஆரம்பமாகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 155 – 156. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆக, இவ்வுலக சொர்க்க வாழ்க்கை அல்லது மறுமையின் சொர்க்கத்தை பெறுவதற்கு முயற்சி செய்தல் மேலும் நரகத்திலிருந்து தப்பித்தல் மேலும் எவ்வாறு தப்பிக்க வேண்டும் என்பது தொடர்பாக அன்னார் இதையே கூறியிருக்கின்றார்கள். அதாவது திருக்குர்ஆனின் கூற்றிற்கேற்ப நரகத்திலிருந்து தப்பிப்பது மற்றும் சொர்க்கத்தை அடைவது என்பது மறுமையின் நரகம் மற்றும் சொர்க்கம் என்பது மட்டும் அல்ல. மாறாக, இவ்வுலகிலும் சொர்க்கமும் நரகமும் இருக்கின்றன. மனிதன் இறைவனுக்கு அஞ்சினால் மட்டுமே இதிலிருந்து தவிர்ந்திருப்பது சாத்தியமாகும்.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எப்போதும் இறைவன் என்னைப் பார்க்கின்றான் என்ற உணர்வு உள்ளவரே உண்மையான முஹ்ஸின் ஆவார். இந்த உணர்வு இருக்கும் போது அதாவது இறைவன் என்னை பார்க்கின்றான் என்ற உணர்வு இருக்கின்ற போது இறைவனை பற்றிய அச்சம் எழுகின்றது. அப்போது தான் மனிதன் தீமையிலிருந்து தவிர்ந்திருக்கின்றான். மேலும் எவர் தீமையிலிருந்து தவிர்ந்திருக்கின்றாரோ அவர் உள்ளத்தின் நிம்மதியற்ற தன்மையிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றார். ஒரு திருடன் அல்லது வேறு ஏதேனும் தவறான வேலையை செய்பவருக்கு ஒருவேளை நான் பிடிபட்டு விடுவேனோ என்ற அச்சம் எப்போதும் இருக்கின்றது. அல்லது வேறு வகையில் அவப்பெயர் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இருக்கின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த பயம் தான் அவனை இவ்வுலகில் நரகில் ஆழ்த்தி விடுகின்றது. ஆக, இறைவனின் அச்சத்தை கொண்டவர் இவ்வுலகிலும் மறுமையிலும் சொர்க்கத்தை சம்பாதிக்கக் கூடியவராக இருக்கின்றார். மேலும் தீமைகள் மற்றும் மன இச்சைகளில் மூழ்கி இருப்பவர் இவ்வுலகிலும் மறுமையிலும் நரகத்தை சம்பாதிக்கக் கூடியவராக இருக்கின்றார்.

அவர்கள் கூறினார்கள்: இறைவன் பக்கம் குனிவது மற்றும் அவன் மீது நன்றியுணர்வுடன் இருப்பதுமே சொர்க்கமாகும். மேலும் அவனை விட்டு தூரம் செல்வது நரகமாகும். ஆக, நரகத்திலிருந்து இரட்சிப்பு என்ற விஷயம் இறைவனுடைய கட்டளைகளின்படி அமல் செய்வது மற்றும் அவனுடைய அச்சம் மற்றும் தக்வாவை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும் என்பதில் வந்து நிற்கின்றது. ஆக, இந்த சிறிய ஹதீஸில் மூன்று விஷயங்களைக் கூறி பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கருணையின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். மேலும் அதில் நிலைத்திருப்பதற்கு பாவமன்னிப்பின்

பக்கம் கவனமூட்டி இருக்கின்றார்கள். பிறகு அதில் நிலைத்திருக்குமாறு வழிகாட்டியவாறு மனிதன் இந்த விஷயத்தை அடைந்து விட்டால் பிறகு அவனுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் அல்லாஹ்வின் விருப்பத்தை முன்நிறுத்தியவாறு ஆகிவிடுகின்றது எனக் கூறினார்கள். தீமையின் மீது வெறுப்பு மேலும் நன்மையை செய்வதன் மீது ஆர்வம் ஏற்பட்டு விடுகின்றது. ரமலானின் நிலையான அருள் அவருடைய வாழ்க்கையின் அங்கமாக ஆகிவிடுகின்றது. மேலும் அவர் நரகத்திலிருந்து தூரம் விலக்கி வைக்கப்படுகின்றார். மேலும் இவ்வுலகிலும் மறுமையிலும் இறைவனுடைய விருப்பத்தைப் பெற்று அவனுடைய சொர்க்கத்திலிருந்து அருளைப் பெறுகிறார்.

ஆக, நாம் இந்த விஷயத்தை எப்போதும் நம்முன் வைக்க வேண்டும். மேலும் அதற்கேற்ப சிந்திக்க வேண்டும். ரமலானின் இறுதி பத்து நாட்களில் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுவதற்கு மற்றும் ஈமானை எப்போதும் உறுதியாக வைப்பதற்கு மேலும் இறையச்சத்தின் மீது நிலைத்து நிற்பதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் இன்னொரு விஷயத்தின் பக்கமும் கவனமூட்டியுள்ளார்கள். நற்செய்தி வழங்கியிருக்கின்றார்கள். அது என்னவென்றால், இந்த நாட்களில் அதாவது இறுதி பத்தில் லைலதுல் கத்ர் உள்ளது என்பதாகும். ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் ஈமான் கொண்ட நிலைமையில் ஆன்மாவை பரிசீலித்தவாறு ரமலானின் நோன்பு நோற்பாரோ அவருக்கு அவரின் கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. மேலும் எவர் ஈமான் கொண்ட நிலைமையில் மேலும் தன்னுடைய ஆன்மாவை பரிசீலித்தவாறு லைலதுல் கத்ர் இரவின் இறைவணக்கம் செய்வாரோ அவருடைய கடந்த கால பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன.

(சஹீஹுல் புகாரி கிதாபு ஃபழ்லு லைத்தில் கத்ர் பாபு ஃபழ்லு லைலத்தில் கத்ர் ஹதீஸ் நம்பர் 2014)

லைலதுல் கத்ருக்கு மிகவும் முக்கியத்துவம் இருக்கின்றது. ஆனால், ரமலானின் நோன்பு அதே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஒரு இரவில் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என்பது சரி தான். முந்தைய அமலும் இருக்கின்றன. ரமலானிலும் இதே அமல்கள் தான் இருக்கின்றன. இந்த நிபந்தனைகளும் அவசியம் என்று அல்லாஹ் கூறுகின்றான். ரமலானின் நோன்பும், லைலதுல் கத்ரை அடைதலும், பாவங்களை மன்னிக்க வைப்பதும், ஈமான், ஆன்மாவை ஆராய்வது போன்றவை இருக்கின்றது. ஆரம்ப நாட்களில் ஏதேனும் குறைகள் இருந்திருப்பினும் இறுதி நாட்களில் அதை களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். லைலதுல் கத்ர் எவருக்கு கிடைக்குமோ அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும் என்று மட்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறவில்லை. மாறாக, நோன்பு மற்றும் லைலதுல் கத்ரோடு ஈமானின் நிலைமையில் மேலும் தன்னுடைய ஆன்மாவை ஆராய்ந்தவாறு அந்நாட்களை கடந்து சென்றால் அவர் அல்லாஹ்வின் மன்னிப்பின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அல்லாஹ் அவரை மன்னித்து விடுகின்றான். முஃமின்களுக்கு அல்லாஹ் பல்வேறு சிறப்பம்சங்களையும் நிபந்தனைகளையும் வைத்துள்ளான். மேலும் அல்லாஹ் பல இடங்களில் ஈமானை நற்செயலோடு இணைத்து கூறுகின்றான். ஆக, இதன் பக்கமும் நமது கவனம் இருக்க வேண்டும். ஈமான் என்பது என்ன ? அல்லாஹ்வின் மீது நம்பிக்கை. அத்தோடு நற்செயல். அல்லாஹ் திருக்குர்ஆனில் முஃமின்களுக்கான பல்வேறு அடையாளங்களை கூறியிருக்கின்றான். அதில் ஓர் அடையாளம் என்னவென்றால், அதாவது அல்லாஹ்வைப்பற்றி கூறப்படும் போது முஃமின்களுடைய உள்ளங்கள் அஞ்சுகின்றன. ஆக, இதுவே ஒரு முஃமினுடைய அடையாளமாகும். எப்போதும் இறைவனுடைய கட்டளைகளின்படி அமல் செய்வது அவசியமாகும் என்ற உணர்வில் இருப்பதாகும். எப்போதும் அல்லாஹ் கூறியதாக ஏதேனும் ஒரு விஷயம் நினைவூட்டப்படும் போது உடனடியாக அதற்கு அவர்கள் அஞ்சுவர். அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்வர். ஆக, பல்வேறு இடங்களில் அல்லாஹ்வை சான்று காட்டி நற்செயல்கள் செய்வதற்கும் மேலும் பிற உரிமைகளை செலுத்துவதன் பக்கமும் கவனமூட்டப்படும் போது எப்போதும் நாம் இதை கண்முன் வைக்க வேண்டும். இறைவன் கூறியதாக செய்யுமாறு சொல்லப்படும் போது பிறகு மனிதன் அதை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் பிறகு அவர் இந்த வசனத்திற்கேற்ப முஃமினின் வட்டத்தில் வருவாரா? அல்லது நாம் கவனம் செலுத்தவில்லை என்றால் நாம் வருவோமா ? என்பதை கண்முன் வைக்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: ஒவ்வொருவரும் தன்னை ஆராய்ந்தவாறு தன்னுடைய ஈமானின் நிலைமையைக் பார்த்தவாறு நோன்பு வைத்தால் அல்லது லைலதுல் கத்ரை கடந்து சென்றால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும். ஆக, ரமலான் மற்றும் லைலதுல் கத்ரின் அருட்கள் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். நான் ஆரம்பத்தில் கூறியது போன்று அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர்களின் கட்டளைகள் நிபந்தனைகளைக் கொண்டதாகும். மனிதனின் ஈமானில் பலகீனம் இருந்தும் மேலும் பிறருடைய உரிமைகளை பறித்தும் கூட அவர் லைலதுல் கத்ரை கண்டார் எனக் கூறினாலும் துஆவிற்கான ஒரு குறிப்பான நிலைமை ஏற்பட்டு தன்னுடைய நிலைமையில் முழுமையான புரட்சியை ஏற்படுத்தக் கூடிய நிலைமையை உருவாக்கினாலும் அல்லாஹ்வினுடைய குறிப்பான அருளே அவருக்கு அருளை வழங்கியிருக்கின்றது. அதனுடைய எதிர்பார்ப்பு என்னவென்றால் அதில் நிலைத்திருந்தவாறு அல்லாஹ்வினுடைய கட்டளைகளின்படி அமல் செய்ய வேண்டும் என்பதாகும். இந்த நிலைமை சென்று விட்டால் எதை அவர் லைலதுல் கத்ர் என்று கருதினாரோ அது ஆன்மாவின் ஏமாற்றுதலேயாகும். அன்னார் இதையே கூறியிருக்கின்றார்கள். அதாவது ஈமானும் முழுமையானதாக இருக்க வேண்டும். ஆன்மாவையும் பரிசீலிக்க வேண்டும்.

ஆக, இந்த கருத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்முன் எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதாவது லைலதுல் கத்ர் என்பது ஒரு குறிப்பிட்ட இரவு மட்டுமல்ல. லைலதுல் கத்ரின் மூன்று நிலைகள் உள்ளன. ஒன்று ரமலானில் வரக்கூடிய அந்த இரவு. இன்னொன்று நபியின் காலம். இன்னொன்று என்னவென்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் அவர் தூய்மையானவராக ஆவதே அவருக்கு லைலதுல் கத்ர் ஆகும். உலகத்தின் அனைத்து அசுத்தங்களிலிருந்தும், மாசுகளிலிருந்தும் தூய்மையாக ஆவதாகும். தன்னுடைய ஈமானில் உறுதியாக நிலைநிற்பதாகும். தன்னை ஆராய்ந்தவாறு அனைத்து தீமைகளையும் தன்னை விட்டு அகற்றி இருப்பதாகும். ஆக, இந்த லைலதுல் கத்ர் நமக்கு கிடைத்து விட்டால் நாம் முற்றிலுமாக இறைவனுக்காக ஆகிவிட்டால் மேலும் அவனுடைய கட்டளைகளின்படி அமல் செய்யக்கூடியவர்களாக ஆகிவிட்டால் மேலும் நம்முடைய இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்துபவர்களாக ஆகிவிட்டால் இதுவே அல்லாஹ் நாம் பெற வேண்டும் என்று கூறிய நோக்கங்களாகும். நாம் இந்த தரத்தை அடைந்து விட்டால் அல்லது நாம் இதை செய்து விட்டால் ஒவ்வொரு பகலும் இரவும் நமக்கு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நேரமாகும். பெருமானார் (ஸல்) அவர்களின் பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களாகிய நாம் நம்முடைய நிலைமைகளில் புரட்சியை ஏற்படுத்தியவாறு நம்முடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனுடைய விருப்பத்தை பெறுவதற்காக ஆகக்கூடிய அளவில் நம்முடைய ஈமானின் தரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். நாம் நம்மை ஆராய்ந்தவாறு நம்முடைய வாழ்க்கையை கழிக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் ரமலானின் அருள்கள் எப்போதும் நம்மில் நிலைபெற வேண்டும். அல்லாஹ் நம்மில் பெரும்பாலானவர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய ரமலானின் இறுதி நாட்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தருணமான ரமலானின் அந்த லைலதுல் கத்ரையும் பெறக்கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் அதை பெறுவது நம்மை மற்றும் இறையச்சத்தில் மேலும் முன்னேறுபவர்களாக ஆக்கட்டுமாக. நம்முடைய கடந்த கால அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படட்டுமாக. மேலும் அல்லாஹ் தன்னுடைய அருளால் வருங்காலத்திலும் பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான ஆற்றலை வழங்குவானாக. ஆமீன்.

**பத்திரிகைக்காக உங்களது வருடாந்திர சந்தாவையும், நன்கொடைகளையும் தாராள மனதுடன் வழங்குங்கள். மேலும் உங்களது மேலான ஆலோசனைகளை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.**

தொடர்புக்கு :
1. A.P.Y. அப்துல் காதிர் (Sadr Management Committee) 8124963500
2. மவ்லவி M. ரஃபீக் அஹ்மது (ஆசிரியர்) – 9944803650
3. மவ்லவி A. கலீல் அஹ்மது (இன்ஸ்பெக்டர்) – 9952712731

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை
(வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண் : *1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

*(...8 வது பக்கத்தின் தொடர்ச்சி)*

கொண்டிருக்கின்றது. அவர்கள் கூறுகின்றார்கள். நான் சிறுவனாக இருந்தேன். அப்போதும் எனது வேலை இதுவாகத் தான் இருக்கும். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சபையில் அமர்ந்திருந்தேன். அவர்கள் கூறும் விஷயங்களைக் கேட்பேன். நாங்கள் அவர்களது சபையில் எத்தனை விஷயங்களைக் கேட்டோம் என்றால் நாங்கள் அவர்கள் எழுதிய நூல்களைப் படிக்கும் போது இந்த விஷயங்கள் எல்லாம் நாம் ஏற்கனவே கேட்டிருக்கின்றோம் என்பது தெரிய வரும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வழக்கம் என்னவென்றால், அவர்கள் எவற்றையெல்லாம் பகலில் எழுதுவார்களோ அவற்றை மாலையில் சபையில் வந்து எடுத்துக் கூறுவார்கள். எனவே, அவர்கள் கூறிய எல்லா விஷயங்களும் எங்களுக்கு மனப்பாடமாக இருந்தது. எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நாட்டத்திற்கும் அன்னாரது போதனைக்கும் ஏற்ப இருக்கின்ற இந்த எல்லா கருத்துக்களையும் நாங்கள் நன்றாக புரிந்து கொண்டோம்.

பிறகு உண்மையான ஈமானைப்பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: ஒரு தாயிடம் அவள் தனது குழந்தைக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை மட்டும் கூறினால் அதாவது நீ குழந்தைக்கு தொண்டு செய்யாமல் இருந்தால் வீட்டின் அமைப்பு தலைகீழாக மாறி விடும். இது நடக்கும். அது நடக்கும் என்று கூறினால் இந்த ஆதாரம் அவள் மீது ஒரு நிமிடத்திற்கு கூட எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. தாய்க்கு ஆதாரத்தைக் கூறி குழந்தைக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. அவள் தனது குழந்தைக்கு தொண்டு செய்கின்றாள் என்றால் அவளது உள்ளத்தில் இருக்கின்ற அன்பின் உணர்வின் அடிப்படையிலேயே அவள் அதை செய்கின்றாள்.

எனவே தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூதாட்டிகளைப் போன்று ஈமான் கொள்வது தான் மனிதனை தடுமாற்றத்திலிருந்தும் காப்பாற்றுகிறது என்று கூறினார்கள். அவ்வாறல்லாமல் எவர்கள் தெளிவுகளையும், அத்தாட்சிகளையும் தேடியவாறு ஒவ்வொரு இடமாக நின்று நின்று செல்கின்றனரோ மேலும் இந்த கட்டளை ஏன் தரப்பட்டிருக்கின்றது ? இதை செய்யும்படி ஏன் கூறப்படுகின்றது ? என்று கேட்கின்றனரோ அவர்களுக்கு சில நேரங்களில் தடுமாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. அவர்களிடம் எஞ்சியிருந்த ஈமானும் வீணாகிப் போய் விடுகின்றது. முழுமையான ஈமானுள்ள நபர் தனது ஈமானுக்கான அடித்தளத்தை தான் பார்த்தவற்றின் மீது வைக்கின்றார். அவர் மற்றவர்கள் கூறும் ஆதாரங்களை கேட்கவும் செய்வார். ஆனால் அவர்கள் செய்யும் ஆட்சேபனைகளால் ஏற்படும் தாக்கத்தை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் அவர் இறைவனை தனது ஆன்மீக கண்களால் பார்த்திருக்கின்றார்.

பிறகு அவர்கள் முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்களின் உதாரணத்தை எடுத்துக் கூறினார்கள். இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஒரு சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் சம்பந்தமான ஒரு நகைச்சுவை எனக்கு நினைவில் இருக்கின்றது. (இது பற்றி நான் இதற்கு முன்னரும் பல முறை கூறியுள்ளேன். மீண்டும் இப்போதும் கூறுகின்றேன்.) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். பலரும் என்னிடம் நீங்கள் மவ்லவி சனாவுல்லாஹ் அவர்களின் சொற்பொழிவை ஒருமுறை கேட்டால் மிர்ஸா சாஹிப் உண்மையாளரா ? இல்லையா ? என்பது உங்களுக்குத் தெரிந்து விடும் என்று கூறியிருந்தனர். அவர்கள் கூறுகின்றார்கள். ஒருமுறை நான் மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் அவர்களின் சொற்பொழிவை கேட்டேன். அதற்கு பிறகு மக்கள் என்னிடம் இப்போது கூறுங்கள். இவ்வளவு ஆதாரங்களைக் கேட்ட பிறகும் நீங்கள் மிர்ஸா சாஹிபை உண்மையாளர் என்று கருதுகின்றீர்களா? என்று கேட்டனர். அதற்கு நான் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் முகத்தை நான் பார்த்துள்ளேன். அவர்களது முகத்தை கண்ட பிறகு மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் அவர்கள் எனக்கு முன்னால் நின்று இரண்டு வருடங்கள் வரை சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் கூட அவரது சொற்பொழிவினால் என்மீது எந்த தாக்கமும் ஏற்பட முடியாது. அது ஒரு பொய்யருடைய முகமாகும் என்று என்னால் கூறவே முடியாது. அவர் செய்கின்ற ஆட்சேபனைகளுக்கு எதிரில் ஏதாவதொரு விஷயத்திற்கு எனக்கு பதில் கூற முடியாமல் இருக்கலாம். அவ்வாறிருந்தாலும் கூட ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் என்றே நான் கூறுவேன். எனவே, நுட்பமான ஞானங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பது ஒரு முழுமை பெற்ற நம்பிக்கை கொண்டவருக்கு அவசியமானதல்ல. அவரது ஈமான் அறிவின் அடிப்படையில் இருக்காது. மாறாக, அவர் எதை நேரடியாக பார்த்தாரோ அதன் அடிப்படையில் இருக்கும்.

முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்களைப் பற்றி இன்னொரு சம்பவம் வருகின்றது. இந்த விஷயத்தை எடுத்துக் கூறுவது அவசியமானதாகும். நாம் நமது இறைவனை நமது ஆன்மீக கண்களால் காண வேண்டும். இது இறைவனுடன் நமது தொடர்பை வளர்த்துக் கொள்வதன் மூலமாகவே ஏற்படும். மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை உலகை சீர்திருத்துவதற்காக அனுப்பியுள்ளான் என்ற விஷயத்தின் மீது நமக்கு உறுதியும் இதன் மூலமாகவே ஏற்படும். மேலும் இது காலத்தின் தேவையும் ஆகும். இந்த காலத்தில் ஒரு சீர்திருத்தவாதி தோன்ற வேண்டும் என்பதை காலம் எதிர்பார்க்கின்றது. உலகத்தின் நிலைமையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கான ஒரு ஆதாரமாக திகழ்கின்றது. இதைத்தவிர வேறு எந்தவொரு ஆதாரமும் தேவையில்லை. ஏனென்றால், இந்த சீர்குலைந்த காலகட்டம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். எனவே, அல்லாஹ்வுடன் தொடர்பிருந்தால் அல்லாஹ்வின் மீது அச்சமும் இருக்கும். பிறகு அதிகமான அடையாளங்களையும், அற்புதங்களையும் பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆதாரங்களின் தேவை இருக்காது. அற்புதங்களைக் கோர வேண்டிய அவசியம் இருக்காது. காலத்தின் தேவையும், அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அவர்களது உண்மைக்கு ஆதாரமாக திகழ்கின்றன. எனவே நாம் இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வகையில் நமது ஈமானையும் வலுப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இந்த காலத்தில் தேவை தொடர்பான இந்த உணர்வு மற்ற முஸ்லிம்களுக்கும் ஏற்படும்படி இறைவன் செய்வானாக. அதன் மூலம் அவர்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*(...முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

அவர்களை வெளிப்படையான மற்றும் ஆன்மீக அருள்களிலிருந்து பலன்பெற வைப்பானாக.

### அல்லாஹ்வுக்காக நான் நேசிக்கின்ற காஸி காஜா அலி சாஹிப்

காஸி சாஹிப் இந்த எளியவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட நண்பர்களில் ஒருவர் ஆவார். அன்பு, கலப்பற்ற மனத்தூய்மை, பற்று, உண்மை, தூய்மை ஆகியவற்றின் அடையாங்கள் அவர்களது முகத்தில் மிகுதியாக தென்படுகின்றது. மார்க்கத்திற்கு தொண்டு புரிவதற்காக எல்லா நேரமும் அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். அவர்கள் முன்னவர்களில் முதன்மையானவர்களாக இருப்பவர்களில் ஒருவராவார். அவர்களில் எனது சகோதரரான மீர் அப்பாஸ் அலி சாஹிப் அவர்களும் ஒருவராவார். அவர் எப்போதும் தொண்டு புரிவதிலலேயே ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் லூதியானாவில் தங்கியிருந்த நாட்களில் அதாவது ஆறு மாதங்கள் வரையிலும் பிறகு அதற்கடுத்த ஆறு மாதங்கள் வரையிலும் என பல நாட்கள் விருந்தோம்பல் செய்வதற்காக வரும் செலவுகளில் ஒரு பெரும் பகுதியை அவர்கள் தமது பொறுப்பில் ஏற்றுக் கொண்டார்கள். தனது ஆதிக்கத்தில் இருந்த ஆற்றலுக்கு ஏற்ப இயன்றவரை அனுதாபத்துடன் நடந்து கொள்வதிலும் தொண்டு செய்வதிலும் எல்லா வகையான துக்கங்களையும் சகித்துக் கொள்வதிலும் எந்தவொரு விஷயத்தின் காரணமாகவும் அவர்கள் வித்தியாசம் காட்டியதேயில்லை. அவர்கள் முதலிலேயே தூய்மையுள்ள கலப்பற்ற பற்று வைத்திருப்பவராக இருந்தும்கூட இப்போது அவர்கள் அதிகமாக எனது அருகில் ஈர்க்கப்பட்டுள்ளார்.

உண்மையின் ஒளியானது ஒரு தன்னலமற்ற கலப்பற்ற மனத்தூய்மை மற்றும் இறைவனுக்காக ஒருவரை நேசிப்பது ஆகியவற்றில் ஒவ்வொரு நொடியும் அவர்களுக்கு முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டிருப்பதை நான் காண்கின்றேன். இந்த முன்னேற்றங்களின் காரணமாக தமது நல்ல எண்ணங்களின் நிலைமைகளில் அதிகமதிகமாக அவர்கள் தூய்மையை பெற்றுக் கொண்டே இருக்கின்றார்கள். மேலும் ஆன்மீக பலகீனங்கள் மீது வெற்றி பெற்றுக் கொண்டே செல்கின்றார்கள். உலக ரீதியாகவும் ஒரு சரியான நுட்பமான தொலைநோக்கு பார்வையுடையவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள் என்றும் கூட எனது உள்ளம் அவர்களைப் பற்றி சாட்சி கூறுகின்றது. இறைவனின் அருளானது இந்த எளியவனின் ஆன்மீக மகிமையின் ஒரு கண்ணியமிக்க பகுதியை அவருக்கும் வழங்கியிருக்கின்றது. சீடராக இருக்கும் நிலையில் அதற்குரிய மரியாதைகளை கடைபிடிப்பதில் அவர்கள் தூய்மைகளை பெற்றுக் கொண்டே செல்கின்றார்கள். ஆட்சேபனைகளை குறைவாக செய்வது மற்றும் நல்ல எண்ணங்களின் பக்கம் அவர்களது பாதம் முன்னேறி சென்று கொண்டிருக்கின்றது. எனது அறிவிற்கேற்ப ஒருவருக்கு ஏதாவதொரு அபாயகரமான தடுமாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள அந்த கட்டங்களை அவர்கள் கடந்து வந்து விட்டார்கள்.

**(இஸாலே அவ்ஹாம் ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 527 – 530)**

**EDITOR**
MUZZAMMIL AHMAD
Mobile. : (+91) 99448-03650
: (+91) 98885 67232
e-mail :editorbadrtamil@gmail.com
website:www.akhbarbadarqadian.in
:www.alislam.org

Title Code: PUNTAM00001

The Weekly **BADAR** Qadian பத்ர் வாரப்பத்திரிகை காதியான்

Distt: Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Vol.1. Monday 10 March 2016 Issue No.1

**MANAGER**
NAWAB AHMAD
Mobile. : (+91) 94170-20616
Tel : (+91)-1872-224757
e-mail :managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION:Rs.300/-

அல்லாஹ் தஆலா தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பி இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை துவக்கினான். 1400 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் புத்தும்புது வஹீ இறங்குகின்ற அந்த காலத்தைப் பெற்ற மக்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்ற மக்கள் ஆவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அவர்கள் நேரடியாக இந்த அருள்களைப் பெற்றனர்.

இப்போது உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமைகளைப் பற்றி சுருக்கமாக எடுத்தக் கூற இருக்கின்றேன். எந்த அளவு விரைவாக உலகம் அழிவை நோக்கி செல்கின்றதென்றால் அதை கருத்தில் கொண்டவாறு ஜமாஅத் சகோதரர்கள் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும்.அல்லாஹ் இந்த அரசாங்கங்களுக்கும் பெரும் சக்திகளுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் உலகை அழிவின் பக்கம் கொண்டு செல்லாமல் இருக்கட்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04.12.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் தஆலா தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பி இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை துவக்கினான். 1400 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் புத்தும்புது வஹீ இறங்குகின்ற அந்த காலத்தைப் பெற்ற மக்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்ற மக்கள் ஆவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அவர்கள் நேரடியாக இந்த அருள்களைப் பெற்றனர். மனிதன் கற்பனை கண்கள் மூலமாக எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் அவர்களுக்க அருகில் இருந்தவாறு தங்களது நற்பாக்கியத்தை எண்ணி எவ்வாறெல்லாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு அவனைப் புகழ்ந்திருப்பார்கள் என்பதை பார்க்கும் போது உள்ளத்தில் வியக்கத்தொரு நிலைமை இருக்கும். அல்லாஹ் எவ்வாறு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளான். அத்தகைய மக்களை பின்னவர்களிலும் நான் உருவாக்குவேன். அவர்கள் முன்னவர்களை சந்தித்து விடுவர் என்று அவன் கூறிய போது அதற்காக வஹீ மற்றும் இல்ஹாமின் புத்தம்புது அடையாளங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர் மூலமாக எடுத்துக் காட்டி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தவர்களின் ஈமானை அவன் மிகவும் வலுவானதாக ஆக்கி விட்டான். இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த புத்தம் புதிய இல்ஹாம் இறங்கியுள்ளது என்பதைப் பற்றி தெரிந்து கொள்வோம் என்று கூறியவாரே அவர்கள் தங்களது ஒவ்வொரு காலை நேரத்தையும் துவக்கினர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது நிலை எப்படி இருந்தது என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகைக்காக சென்றதுமே நாங்கள் ஓடிச்சென்று அவர்களது நோட்புக்கில் என்ன வஹீ எழுதப்பட்டுள்ளது என்பதை பார்க்க ஆரம்பித்தோம். அல்லது நாங்கள் பள்ளிவாசலுக்கே சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய அருளுக்குரிய நாவிலிருந்தே என்ன வஹீ இறங்கியது என்பதை தெரிந்து கொள்வோம்.

இந்த இன்பமும், ஆர்வமும் எங்களது ஈமானுக்கு மேலும் ஒளிவூட்ட வேண்டும். அதை வலுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இருந்தது. அதன் அருள்களைப் பெற வேண்டும் என்பதற்காகவும் இருந்தது. மேலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவனை புகழ வேண்டும் என்பதற்காகவும் இருந்தது. அந்த இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொள்வதற்கான நல்வாய்ப்பை தந்தான். சில நேரங்களில் இவ்வாறும் நடந்துள்ளது. ஏதாவதொரு சஹாபி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருகில் இருக்கும் இடத்திலேயே இல்ஹாம் இறங்கியது. அந்த நற்பாக்கியம் பெற்றவரும் அல்லாஹ்வின் வஹீயை கேட்டுக் கொண்டிருந்தார். சில சமயங்களில் இது போன்ற நிலைமையும் ஏற்பட்டது. அதாவது உடன் அமர்ந்திருப்பவரும் அந்த வஹீயை கேட்டார். அவ்வாறே ஒரு சஹாபி இருக்கும் போது இல்ஹாம் இறங்கியது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த ஒரு வஹீயின் துவக்கத்தில் அர்ரஹா என்ற வார்த்தை இருக்கும். பிறகு அந்த முழு வஹீயும் குறிப்பாக ஒரு ருகூவிற்கு சமமானதாக இருக்கும். அந்த வஹீ எப்போது இறங்கியது என்றால் அப்போது ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சிறுநீரகத்தில் வலி இருந்து வந்தது. செய்யது ஃபஸல் ஷா சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உடலை அமுக்கி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இந்த சிறப்புத்தன்மை கிடைத்தது. ஹஸ்ரத் சாஹிபின் உடலை அமுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் ஹுஸூர் (அலை) அவர்கள் மீது இந்த வஹீ இறங்கியது. வஹீயும் எவ்வாறு வந்தது என்றால் சில நேரங்களில் உரத்த குரலில் ஹுஸூர் (அலை) அவர்களது நாவின் மூலம் அந்த சொற்கள் வெளிப்படும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. நாங்கள் சிறுவர்களாக இருந்தோம். நாங்கள் முன்னெச்சரிக்கையின்றி அந்த அறையில் நுழைந்து விடுவோம். அந்த அறையில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் படுத்திருப்பார்கள். அவர்கள் தங்கள் மீது போர்வை போர்த்தியிருந்தார்கள். மர்ஹூம் செய்யது ஃபஸல் ஷா சாஹிப் அவர்கள் அவர்களது உடலை அமுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். வஹீ வருகின்றது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஏனென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த வஹீயை அவர்களை எழுத வைத்தார்கள். செய்யது ஃபஸல் ஷா சாஹிப் அவர்கள் சைகையாக எங்களிடம் இங்கிருந்து சென்று விடுங்கள் என்று கூறினார்கள். நாங்களும் வெளியே வந்து விட்டோம். பிறகு ஒரு நீண்ட வஹீ வந்தது தெரிய வந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்ற இந்த வஹீ ஒரு சம்பவத்துடனும் வழக்குடனும் தொடர்புடையதாகும். அதாவது மிர்ஸா இமாமுத்தீன் போன்றோர் ஒரு சுவரை எழுப்பி வழிப்பாதையை அடைத்தனர். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பத்தரங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு கூறப்படும் என்று தெரிந்தது. இன்னும் சொல்வதென்றால் வழக்கு விரைவில் முடிந்து விடும் என்று அவர்கள் எல்லோரிடமும் கூற ஆரம்பித்து விட்டனர். ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இதைப்பற்றி எவ்வாறு தெரிவித்திருந்தானோ அவ்வாறு தான் நடந்தது. இறுதி நேரத்தில் பத்தரத்தாழ்களின் எத்தகையதொரு ஆதாரம் கிடைத்ததென்றால் அதன் அடிப்படையில் அந்த நிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த உரிமை மிர்ஸா இமாமுத்தீன் அவர்களுக்கு மட்டுமின்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் தந்தையான ஹஸ்ரத் குலாம் முர்தஸா சாஹிப் அவர்களுக்கும் இருக்கின்றது என்பது தெரிய வந்தது. இதன் அடிப்படையில் நீதிமன்றம் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு கூறியது. சுவரை இடிக்குமாறு கட்டளையிட்டது. இந்த வஹீயும் மிகப்பெரும் மகிமையை தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சபைகளைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து நேரடியாக சில விஷயங்களை கேட்டோம். அவர்களது குரல் இப்போதும் எங்களது காதுகளில் எதிரொலித்துக்

(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadina, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab,India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516,Punjab.India.Editor:Muzzammil Ahmad